Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 028 | செவ்வாய்க்கிழமை Tuesday | 28.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மே 4க்கு பிறகு பாஜக அரசின் பதவியேற்பு விழாவுக்காக மேற்கு வங்கம் வருவேன் பிரதமர் மோடி நம்பிக்கை



பாரக்பூர்:

"மே 4-ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியாகும் போது பாஜக வெற்றி பெறும் என்பதில் முழு நம்பிக்கை உள்ளது. அடுத்ததாக பாஜக அரசின் பதவியேற்பு விழாவுக்காக நான் மீண்டும் மேற்கு வங்கம் வருவேன்" என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்தார்.


இரண்டாம் கட்ட வாக்குப் பதிவுக்காக மேற்கு வங்க மாநிலம் பராக்பூரில் நடந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "மேற்கு வங்கத்தின் மீது நான் கொண்டுள்ள பற்று என்பது சக்தி மீதான ஒரு பக்தியாகவே இருந்து வருகிறது.

எனது தனிப்பட்ட ஆன்மிகப் பயணத்தின் ஆற்றல் மையமாக இப்பகுதி திகழ்கிறது. மேற்கு வங்கத்தின் மகத்தான ஆளுமைகளாலும், இங்கு மக்கள் வடிவில் உள்ள கடவுள்களின் அளவற்ற அன்பாலும் நான் பெரிதும் ஈர்க்கப்பட்டுள்ளேன். இந்தப்புண்ணியபூமியில்நான்பெற்றஅனுபவங்களை, எனக்குக் கிடைத்த ஒரு பெரும் வரமாகவே நான் கருதுகிறேன். இந்தத் தேர்தலில் நான் பங்கேற்கும் கடைசிப் பேரணி இதுதான். மேற்கு வங்கத்தில் நான் சென்ற இடமெல்லாம் மக்களின் மனநிலையை மிக உன்னிப்பாகக் கவனித்தேன். மே 4-ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, பாஜகவின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காக நான் மீண்டும் இங்கு வர நேரிடும் என்ற முழு நம்பிக்கையுடன் நான்திரும்புகிறேன்.

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற பேரணிகள் மற்றும் சாலைப் பயணங்களின்போது, என் மனம் நெகிழக் -கூடிய வகையிலான செய்திகளையும், ஓவிய ங்களையும் நான் பரிசாகப் பெற்றேன்.

அவற்றை என்னால் ஒருபோதும் மறக்க இயலாது. பிரச்சார நிகழ்வுகள் முடிந்த பிறகு,இரவில்தனித்து அமர்ந்து, ஒவ்வொரு ஓவியத்தையும் மிகக் கவனமாகப் பார்வையிடுவேன். அந்த ஓவியங்களை வரைந்த கலைஞர்கள்வெளிப்படுத்திய உணர்வுகளை ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பேன். உங்கள் செய்திகளையும் கடிதங்களையும் நான் தவறாமல் வாசிப்பேன். சில கடிதங்களில் உங்கள் துயரங்களைப் பார்க்கிறேன். வேறு சிலவற்றில் உங்கள் ஆசீர்வாதங்களை உணர்கி றேன். பின்னர், அவற்றுக்கான எனது பதில்களை மிகச் சிந்தனையுடனும் கவனத்துடனும் பதிவு செய்து அனுப்புவதை நான் உறுதிசெய்கிறேன். கடந்த முப்பது முதல் நாற்பது ஆண்டுகளாக, நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும்நான்பயணம் செய்து வருகிறேன். அரசியலில் நுழைந்து பாஜகவில் இணைந்த பிறகு, ஒரு கட்சித் தொண்டனாகவே நான் பணியாற்றினேன். தேர்தல் பணிகளை மேற்கொள்வது உட்பட, கட்சி எனக்கு இட்ட அனைத்துப் பொறுப்புகளையும் நான் சிரமேற்கொண்டு நிறைவேற்றினேன். எனது சொந்த வீட்டை விட்டு வெளியேறிய நாள் முதல், உங்கள் அனைவரின் மத்தியில்தான் நான் ஆறுதலையும் அமைதியையும் கண்டடைந்துள்ளேன். நீங்களேஎனதுகுடும்பம்" என்றார் பிரதமர் மோடி.

# புதுச்சேரியில் மும்மொழி கொள்கை: திமுக, அதிமுக எதிர்ப்பு




புதுச்சேரி: புதுச்சேரியில் மும்மொழிக்கொள்கையில் இந்தி திணிப்பால் போராட்டம் நடத்தப்போவதாக திமுக அறிவித்துள்ளது. அதேபோல் அதிமுகவும் இரு மொழி கொள்கைக்கே ஆதரவு தெரிவித்துள்ளது.சிபிஎஸ்இ பள்ளிகளில் 2026 – 27 கல்வியாண்டு முதல், 6-ம் வகுப்பு மாணவர்களுக்கு 3-வது மொழியைக் கட்டாயமாக்கும் புதிய அறிவிப்பை சிபிஎஸ்இ வெளியிட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக, 'தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு 2023'-ன் பரிந்துரைகளை அமல்படுத்த உள்ளனர். இந்த அறிவிப்பைச் செயல்படுத்த பள்ளிகளுக்கு ஒரு வார கால அவகாசம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இதற்கு திமுக, அதிமுக எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக புதுச்சேரி திமுக மாநில அமைப்பாளர் சிவா கூறியதாவது: மாணவர்களிடையே பன்மொழித் திறனை வளர்க்கிறோம் என்ற பெயரில் மும்மொழிப் பாடத்திட்டத்தின் திணிப்பினால், ஒரு வெளிநாட்டு மொழி, இரு பிராந்திய மொழிகள் படிக்கலாம் என்று சொல்லி, ஆங்கிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு, பிரெஞ்சு பாடம் நீக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் கல்விச் சுமையை அதிகரிப்பதோடு, அவர்களின் இயல்பான கற்றல் முறையையும் பாதிக்கும் செயலாக அமைந்துள்ளது.

போதுமான தயாரிப்புகள் இன்றி,பாடம் எடுக்க புத்தகங்கள் கூட இன்றி, இவ்வளவு அவசரமாக ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவருவது கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பெரும்பதற்றத்தைஏற்படுத்தியுள்ளது. இந்த அறிவிப்பு புதுச்சேரி மண்ணின் தனித்துவமான பிரெஞ்சு கலாச்சார அடையாளத்தையும் அதன் நீண்டகால மொழி வரலாற்றையும் சிதைக்கும் வஞ்சகச் செயலாகும்.

புதுச்சேரி பூர்வகுடி மக்களின் உரிமையை இது நேரடியாகப் பறிக்கிறது.மேலும்,பல ஆண்டுகளாகபிரெஞ்சு மொழி பயிற்றுவித்து வரும் ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தையும், அவர்களின் வேலை வாய்ப்பையும் இந்தத் தன்னிச்சையான முடிவு கேள்விக்குறியாக்கியுள்ளது.

மத்திய பாஜக அரசின் இந்த நடவடிக்கை நாட்டின் பன்முகத் தன்மைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். அண்ணா வகுத்துத் தந்த இரு மொழிக் கொள்கையே (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாணவர்களின் எதிர்காலத்திற்கும் மாநில உரிமைகளுக்கும் உண்மையான பாதுகாப்பு என திமுக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

# சட்டமன்ற பொதுதேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணிக்கான வழிமுறைகள் வெளியீடு

தமிழக சட்டமன்ற தேர்தல் கடந்த 23-ந்தேதி நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை வருகிற மே 4-ந்தேதி நடைபெற உள்ளது. இந்தநிலையில்வாக்கு எண்ணிக்கை நடைமுறைகளை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-





தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 23.04.2026 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி 04.05.2026 (திங்கட்கிழமை) அன்று 62 வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெறவுள்ளது.

வாக்குகள் எண்ணும் வழிமுறைகள்:

Ø வாக்குகள் எண்ணும் பணி சரியாக காலை 8 மணிக்குத் துவங்கும்.

Ø முதலில் காலை 8 மணிக்குத் தபால் வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.

Ø 30 நிமிடங்களுக்கு பிறகு,அதாவது காலை 8:30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணும் பணி துவங்கும்.

Ø மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகளை எண்ணும்சுற்றுகளில், கடைசி சுற்று வாக்குகள் எண்ணும் பணி, தபால் வாக்குகள் எண்ணும் பணி முடிக்கப்பட்டவுடன்தான் துவங்கப்படும்.

Ø ஒவ்வொரு வாக்கு எண்ணும் மையத்திலும் ஒரு பகுதியில் தபால் வாக்குகளும், மற்றொரு பகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (EVM) பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் அதற்குரிய மேசைகளில் எண்ணப்படும். இரண்டிற்கும் தனித்தனியாக மேற்பார்வைக்காக உதவி தேர்தல்நடத்தும்அலுவலர் அளவில் (ARO Level) அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

Ø 500 தபால் வாக்குகளுக்கு ஒரு மேசை என்ற விகிதத்தில் தபால் வாக்குகள் எண்ணப்படும்.

தபால் வாக்குகள்:Ø தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த 3.60 லட்சம் அலுவலர்களில்,வாக்காளர்களாக பதிவு செய்து, வாக்களிக்க விண்ணப்பித்த 2.88 லட்சம் அலுவலர்கள் (80 சதவீதம்) தபால் வாக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

Ø இத்துடன் தேர்தல் பணிக்காக நியமனம் செய்யப்பட்ட காவல்துறை சார்ந்த அலுவலர்களும், மற்ற தேர்தல் Zonal/Sector-ல் பணிபுரிந்த அலுவலர்கள், தேர்தல் கண்காணிப்பு குழுக்களில் பணியாற்றிய அலுவலர்களும் சேர்த்து மொத்தம் 3.36 லட்சம் தேர்தல் அலுவலர்கள் தபால் வாக்குகளாகவும், 1.10 லட்சம் அலுவலர்கள் தேர்தல்பணி சான்றிதழ் (Election Duty Certificate) பெற்று நேரடியாக வாக்குச்சாவடியிலும், வாக்களித்துள்ளனர்.

Ø 85+ மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் அளித்த படிவம் 12D விண்ணப்பத்தின் பெயரில், மொத்தம் 1.73 லட்சம் வாக்காளர்கள் தபால் வாக்கு பெற்று வாக்களித்துள்ளனர்.

Ø இதுவரை சேவை வாக்காளர்கள் (Service Voters) 18,000 நபர்கள் வாக்களித்துள்ளனர். இவர்களின் தபால் வாக்குகள் வாக்கு எண்ணிக்கை நாளான 04-05-2026 (திங்கட்கிழமை) அன்று காலை 8 வரை பெறப்படும்.

Ø வாக்குச்சாவடியில்வாக்களித்தவாக்காளர்கள் மட்டுமின்றி, கூடுதலாக 6.37 லட்சம் வாக்காளர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக வசதிகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களிடம் வாக்குகள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் / பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### தேவகோட்டை பகுதியில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில்

# தீயணைப்பு விழிப்புணர்வு வினாடிவினா போட்டி: வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டு



தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை பகுதியில் உள்ளசேர்மன்மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில், தீயணைப்பு மற்றும் மீட்பு துறையின் சார்பில் நடைபெற்ற வினாடி-வினா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம்தலைமை தாங்கினார். ஆசிரியை முத்துலட்சுமி வரவேற்புரை நிகழ்த்தினார். சமீபத்தில் தேவகோட்டை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம் சார்பில், தீயணைப்பு பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த வினாடி-வினா போட்டி நடத்தப்பட்டது.இந்தப் போட்டியில் சிறப்பாக பதிலளித்து வெற்றி பெற்ற மாணவிகள் அபர்ணா, ரித்திகா, நந்தனா மற்றும் மாணவர்கள் யோகின், விஜய்கண்ணன் ஆகியோருக்கு, தேவகோட்டை தீயணைப்பு நிலையத்தின் நிலைய அலுவலர் கணேசன் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

நிறைவாக ஆசிரியை முத்துமீனாள் நன்றி கூறினார்.



சேலம் அஸ்தம்பட்டி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளகாத்தில் ரூ.59.43 கோடி மதிப்பில் இரண்டு பன்னடுக்குகள் கொண்ட நீதிமன்ற கட்டட திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட முதன்மை நீதிபதி சுமதி வரவேற்றார். விழாவுக்கு,உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி,உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுரேஷ்குமார், இளந்திரையன்,உயர்நீதிமன்ற நீதிபதியும், சேலம் மாவட்டத்துக்கான பொறுப்பு நீதிபதிகளான ஜெயசந்திரன், குமரப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "பாஜகவை மேற்கு வங்க மக்கள் பழிவாங்குவர்" கொல்கத்தாவில் கேஜ்ரிவால் கருத்து

புதுடெல்லி: "எஸ்ஐஆர் (SIR) செயல்முறையின் போது, மேற்கு வங்கத்தில் இருந்து 90லட்சம் வாக்குகளை நீக்கியதற்காக, பாஜகவை மக்கள் பழிவாங்குவார்கள்" என ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.



மேற்கு வங்கத்தில் தேர்தல் களம் தீவிரமடைந்துள்ளது. தேர்தலின் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு ஏப்ரல் 29-ஆம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதி நடைபெறும். தேர்தலின் முதல் கட்டத்தில் 93.2% வாக்குப் பதிவு பதிவாகியுள்ளது.

இந்நிலையில், கொல்கத்தாவில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில்பேசிய அரவிந்த் கேஜ்ரிவால், "நடைபெறவிருக்கும் தேர்தலில் வெற்றி பெற மம்தா பானர்ஜிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சர்வாதிகாரத்துக்கு எதிராக மேற்கு வங்க மக்கள் போராடி வரும் விதத்துக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். கடந்த இரண்டு நாட்களில் மாநிலத்தில் நான் கண்ட சூழலைப் பார்க்கும்போது, எஸ்ஐஆர் (SIR) செயல்முறையின் போது, மேற்கு வங்கத்தில் இருந்து 90லட்சம் வாக்கு களை நீ க்கி யதற்காக, பாஜகவை மக்கள் பழிவாங்குவார்கள்என்றுதோன்று கிறது" என்று பேசினார்.

இதனிடையே மம்தா பானர்ஜி தனது எக்ஸ் தளத்தில், "நேற்று நடைபெற்ற பாதயாத்திரை மற்றும் மக்கள் சபை கூட்டங்களில் மக்கள் வெளிப்படுத்திய உற்சாகம்,உண்மையான அன்பு ஆகியவை வார்த்தைகளால் விவரிக்க முடியாத வகையில்என்னை நெகிழச்செய்துள்ளன" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மேற்கு வங்கம் நீண்ட காலமாகவே நல்லிணக்கத்தின் கலங்கரை விளக்கமாகவும், நாகரிகப் பெருமையின் அடையாளமாகவும் திகழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### கூடலூர் திவ்யா தட்டச்சு பயிற்சி மையத்தில்

# வெப்ப சலன விழிப்புணர்வு மற்றும் இலவச மருத்துவ முகாம்



கூடலூர் திவ்யா தட்டச்சு பயிற்சி மையத்தில் வெப்ப சலன பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், இந்திய செஞ்சிலுவை சங்க நடமாடும் மருத்துவக் குழு, திவ்யா தட்டச்சு பயிற்சி மையம், கார்மேல் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் சேரம்பாடி மற்றும் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் பந்தலூர்

ஆகியோர் இணைந்து நடத்திய இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, இலவச மருத்துவ மற்றும் கண் பரிசோதனை முகாமிற்கு திவ்யா தட்டச்சு பயிற்சி மைய முதல்வர் எபினேசர் தலைமை தாங்கினார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், கூடலூர் ரெப்கோ வங்கி (மைக்ரோ பைனான்ஸ்) கூடலூர் கிளை மேலாளர் சுஜாதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கார்மேல் ஷாலோம் சாரிட்டபிள் டிரஸ்ட் இயக்குனர் தனராஜ் முகாமை துவக்கி வைத்தார்

நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் ஜேன் மார்டினெஸ் பேசும்போது வெயிலின் தாக்கத்தால் தலைசுற்றல், அதிக வியர்வை, வாந்தி, மயக்கம், சிறுநீர் மஞ்சளாக போவது உள்ளிட்ட பிரச்சனைகள் ஏற்படும். மிகவும் சேர்வாக இருக்கும் போது உடனே நிழலுக்கு சென்று ஓய்வு எடுக்கவும், தண்ணீர் அல்லது பலரசங்கள் குடித்து உடலில் நீர் பற்றாக்குறையை போக்க வேண்டும்.குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகள் வெயிலில் அதிகம் பாதிக்கப்படுவார்கள் அவர்களை அதிகம் பகல் நேரங்களில் வெளியே வருவதை தவிர்க்கவேண்டும்என்றார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்புமையம்செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை ஒரு டம்ளர் தண்ணீர் அல்லது மோர், இளநீர், எலுமிச்சை சாறு குடிக்கலாம், அதுபோல வெளிர் நிற, இறுக்கமில்லாத பருத்தி ஆடைகள் அணியுங்கள்.கருப்பு மற்றும் அடர் நிறங்கள் சூட்டினை அதிகப்படுத்தும். எண்ணெய், காரம் அதிகம் உள்ள உணவுகளைகுறைத்துகொண்டு நீர்சத்து நிறைந்த உணவுகளை அதிகம் எடுத்து கொள்ள வேண்டும் என்றார். தொடர்ந்து செஞ்சிலுவை சங்க மருத்துவ குழுவினர்


மருத்துவர்ஜேன் மார்டினெஸ் தலைமையில் மருந்தாளுநர் நவீன், செவிலியர் சுமதி, நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்ட குழுவினர் ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை மற்றும் பொது மருத்துவ சிகிச்சைகள் அளித்தனர்.தேவை உள்ளவர்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. அதுபோல கண் தொழில்நுட்ப உதவியாளர் பாக்யா கிட்டப்பார்வை, தூரப்பார்வை பரிசோதனை செய்து தேவைபட்டவர்களுக்கு இலவச கண்ணாடிகள் வழங்கினார்.

முகாமில்பயிற்சிமைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# ரயில்களில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு பெட்டிகளில் பயணிக்க சலுகை

சென்னை: ரயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பெட்டிகளில் பயணிக்க, இனி, யுடிஐடி என்னும் தேசிய தனித்துவமான அடையாள அட்டை பயன் படுத்தலாம் என, ரயில்வே வாரியம் அறிவித்துள்ளது., ரயில்வே வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய ரயில்வே வாரியம் சார்பில் இயக்கப்படும், ஒவ்வொரு சாதாரண மற்றும் விரைவு ரயில்களில்,மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பு பெட்டிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பயணிக்க, ரயில்வே வாரியம் வழங்கும் கட்டண சலுகை, பாஸ் பெற்றவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டனர்.


இதர மாற்றுத் திறனாளிகள், முன்பதிவில்லாத சாதாரண பெட்டிகளில் கட்டணம் செலுத்தி பயணித்து வந்தனர். இந்நிலையில், தேசிய மாற்றுத் திறனாளி நலத்துறை வாயிலாக, யுடிஐடி என்னும் தனித்துவமான அடையாள அட்டை பெற்ற அனைவரும், இப்பெட்டிகளில் பயணிக்கலாம்.



ரயில்வே வாரியத்தின் கட்டண சலுகை பாஸ் பெற்றவர்களும் இப்பெட்டிகளில் பயணிக்கலாம். அத்தகைய பாஸ் பெறாத மாற்றுத் திறனாளிகள், கட்டண டிக்கெட் பெற்று, தங்கள் யுடிஐடி அட்டையை காட்டி, இந்த சிறப்பு பெட்டிகளில் பயணிக்கலாம்.

அனுமதியின்றி இப்பெட்டியில் பயணிக்கும் இதர பயணிகள் மீது, ரயில்வே சட்டத்தின் கீழ், உரிய நடவடிக்கை எடுக்கப் படும். இவ் வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முக்கடல் அணை நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகின்றது



நாகர்கோவில்நகருக்கு முக்கடல் அணையில் இருந்து குடிநீர்வழங்கப்பட்டு வருகிறது. 25 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையில் தற்போது தண்ணீர் மைனஸ் அளவிற்கு சென்று விட்டது. இன்று முக்கடல் அணையில் மைனஸ் 9.5 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. முக்கடல் அணை தண்ணீர் குறைந்துவிட்ட நிலையில் புத்தன் அணையில் இருந்து தற்போது நாகர்கோவில் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது

### கோவை கேஎன்ஜி புதூர் பிரிவு, பகுதியில்

# கர்மேல் ஜெபகோபுரம் எனும் தேவாலயத்தில், கோடை கால சிறப்பு வேதாகம வகுப்புகள் எனும் நிகழ்ச்சி நடைபெற்றது

## திறலான குழந்தைகள், குழு, மற்றும் தனிதிறமைகள் வெளிபடுத்தி பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்றனர்




கோவை கேஎன்ஜி புதூர் பிரிவு, பகுதியில்

கர்மேல் ஜெபகோபுரம் எனும் தேவாலயம் கடந்த 20 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது. இதன் போதகராக, ஜோயல் ஆஸ்டீன், எப்சிபா ஜோயல், ஆகியோர் இருந்து வருகின்றனர். இங்கு ஆண்டு தோறும் கோடை கால விடுமுறை வேதாகம வகுப்புகள் நடத்த படுவது வழக்கம். இதன் ஒரு பகுதியாக இந்த ஆண்டு, கோடை கால விடுமுறை வேதாகம வகுப்புகள் நடைபெற்றது. மேலும் இந்த சிறப்புவகுப்புகள் குறித்து போதகர் ஜோயல் ஆஸ்டீன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.. கர்மேல் ஜெபகோபுரம் எனும் தலைமை தேவாலயம் கோவை சிங்காநல்லூர் பகுதியில் கடந்த 31 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இதன் கிளை சபையாக கோவை கேஎன்ஜி புதூர் பிரிவு பகுதியில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் துவங்கி இங்கு செயல்பட்டு வருகிறது. இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட கிறிஸ்தவ, மக்கள் சிறப்பு ஜெபங்கள், ஞாயிறு ஆராதனைகளில் கொள்ளுவதாதாகவும் தெரிவித்தார். இன்றைய தினம்விடுமுறைவேதாகம வகுப்பின் கடைசி வகுப்புகள் நடைபெற்றது. இதில், ஏராளமான குழந்தைகள் கலந்து கொண்டு அவர்களின் நடனம், குறு நடனம், நடைபெற்றது.தொடர்ந்து குழு, மற்றும் தனிதிறமைகளை வெளிபடுத்திய மாணவ மாணவியர்கள், மற்றும் குழந்தைகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கபட்டது.இந்த நிகழ்ச்சியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணைத்தலைவரும், கவுண்டம் பாளையம் சட்ட மன்ற தொகுதி சிலிண்டர் சின்ன வேட்பாளருமான வழக்கறிஞர் புஸ்பாணந்தம், ஜெபா, வர்ஷா, வர்ஷினி, மோகன் ராஜா, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சமாதானம்,ராஜி,ரோஸி, நித்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிட த்தக்கது.

# குமரியில் பெண்கள் வாக்குப்பதிவு அதிகம்




குமரி மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் மொத்தம் 5 லட்சத்து 39 ஆயிரத்து 250 ஆண் வாக்காளர்களும், 6 லட்சத்து 8 ஆயிரத்து 896 பெண் வாக்காளர்களும், 68 மூன்றாம் பாலினத்தவரும்எனமொத்தம்11லட்சத்து 48 ஆயிரத்து 215 வாக்காளர்கள் தங்களது வாக்குகளை பதிவு செய்துள்ளனர். இதில் ஆண்களைவிட பெண்கள் 69 ஆயிரத்து 646 பேர் கூடுதலாக வாக்களித்துள்ளனர் என்று தேர்தல் பிரிவு அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

# ராகவ் சத்தா உள்பட 7 எம்.பி.க்கள் பாஜகவில் இணைய மாநிலங்களவைத் தலைவர் ஒப்புதல்



புது டெல்லி: ஏழு ஆம் ஆத்மி கட்சி மாநிலங்களவை உறுப்பினர்கள் பாரதிய ஜனதா கட்சியில் இணைவதற்கு, மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஒப்புதல் அளித்துள்ளார்.

மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இணைப்புக்கு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, ஏழு ஆம் ஆத்மி கட்சி மாநிலங்களவை உறுப்பினர்களை பாரதிய ஜனதா கட்சியில் இணைத்துக் கொண்டதை மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு வரவேற்றார்.

ஆம் ஆத்மி கட்சியை விட்டு வெளியேறிய ராகவ் சத்தா மற்றும் 6 மாநிலங்களவை உறுப்பினர்களின் இணைப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலங்களவையில் பாஜகவின் பலம் 113 ஆக உயர்ந்துள்ளது. மாநிலங்களவை உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினை இழந்தது ஆம் ஆத்மி கட்சிக்கு மிகப்பெரிய பின்னடைவாக அமைந்துள்ளது. தற்போது மாநிலங்களவையில் ஆம் ஆத்மி கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைந்துள்ளது.

ராகவ் சதா, சந்தீப் பதக் மற்றும் அசோக் மிட்டல் ஆகிய மூவரும் வெள்ளிக்கிழமை அன்று ஆம் ஆத்மி கட்சியிலிருந்து முறைப்படி ராஜினாமா செய்து, பாஜகவில் இணைந்தனர். ஹர்பஜன் சிங், ராஜேந்தர் குப்தா, விக்ரம்ஜித் சிங் சாஹ்னி மற்றும் சுவாதி மாலிவால் ஆகியோரும் பாஜகவுக்குதங்கள் ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

இதற்கிடையில், ஆம் ஆத்மி கட்சியின் எம்.பி. சஞ்சய் சிங், அரசியலமைப்பின் பத்தாவது அட்டவணையின் பத்தி 4-இன் கீழ் இந்த இணைப்பை எதிர்த்தும், அந்தஏழுஎம்.பி.க்களையும்தகுதி நீக்கம்செய்யக் கோரியும் மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் முறைப்படி மனு அளித்தனர்.

இருப்பினும், ஒரு கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் மற்றொரு கட்சியுடன் இணைந்தால் தகுதி நீக்கம் செய்ய முடியாது என்று பத்தாவது அட்டவணை குறிப்பிடுகிறது. 10ல் ஏழு ஆம் ஆத்மி கட்சி எம்.பி.க்கள் பாஜகவில் இணைந்ததன் மூலம் இந்த நிபந்தனை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாநிலங்களவைத் தலைவர் இந்த இணைப்புக்கு ஒப்புதல் அளித்தார்.

இந்த இணைப்பு குறித்து கிரண் ரிஜிஜு வெளியிட்ட எக்ஸ் பதிவில், "ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 எம்.பிக்கள் பாஜகவுடன் இணைவதை மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் ஏற்றுக்கொண்டுள்ளார். தற்போது, ராகவ் சதா, சந்தீப்பதக்,அசோக்மிட்டல், ஹர்பஜன் சிங், சுவாதி மாலிவால், ராஜேந்தர் குப்தா மற்றும் விக்ரம்ஜித் சிங் சஹ்னி ஆகியோர் பாஜக நாடாளுமன்றக் கட்சியின் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை என்பதையும், ஒருபோதும் ஒழுங்கீனத்தையோ அல்லது நாடாளுமன்ற மரபுகளுக்கு எதிரான நடத்தையையோ வெளிப்படுத்தவில்லை என்பதையும் நான் நீண்ட காலமாக கவனித்து வருகிறேன். பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ் தேசத்தைக் கட்டியெழுப்பும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு இவர்கள் நல்வரவு. துக்கடே-துக்கடே இண்டியா கூட்டணிக்கு விடைகொடுத்துள்ளனர்" எனத் தெரிவித்தார்.

# மகன் மீது அம்மிக்கல்லை போட்டு கொலை செய்த தாய்



மதுரை பெருங்குடி அதிசிவன் நகர் பகுதியைச் சேர்ந்தவர் சிவபெருமாள் (30) இவருக்கு திருமணம் ஆகி மனைவியை பிரிந்து தனது தாய் பொற்கொடியுடன் (48) அதே பகுதியில் தனியாக வசித்து வருகிறார் வாழ்ந்து வருகிறார். இந்த நிலையில் சிவபெருமாள் தொடர்ந்துகுடித்துவிட்டு வீட்டில் தமது தாயாருடன் அடிக்கடி தகராறு செய்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை குடி போதையில் வந்த சிவபெருமாள் வழக்கம்போல் தாய் பொற்கொடியிடம் தகராறு ஈடுபட்டு விட்டு வீட்டிற்கு சென்று மது போதையில் அயர்ந்து உறங்கியுள்ளார். அப்போது ஆத்திரமடைந்த பொற்கொடி அம்மிக்கல்லை எடுத்து படுத்திருந்த சிவபெருமாள் தலையில் போட்டு கொலை செய்தார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பெருங்குடி போலீசார் உடலை கைப்பற்றி தாய் பொற்கொடியை கைது செய்தனர். மது போதையில் தொடர்ந்து தகராறு ஈடுபட்டதால் ஆத்திரத்தில் கொலை செய்ததாக தாய் போலீசாரிடம் தெரிவித்துள்ளார்.

மது போதையில் தொடர்ந்து தகராறில் ஈடுபட்டு வந்த மகனை தாயே அம்மிக்கல்லை போட்டு கொலை செய்த சம்பவம் மதுரையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பஞ்சாப் போலீஸ் பாதுகாப்பு வாபஸ்: ஹர்பஜன் சிங் எம்.பி.க்கு சிஆர்பிஎப் வீரர்கள் பாதுகாப்பு



சண்டிகர்: ஆம் ஆத்மியைச் சேர்ந்த ராகவ் சத்தா, ஹர்பஜன் சிங் உள்ளிட்ட 7 மாநிலங்களவை எம்.பி.க்கள் அண்மையில் அக்கட்சியில் இருந்து விலகி பாஜகவில் இணைந்தனர். இந்நிலையில், ஜலந்தரில் உள்ள ஹர்பஜன் சிங்கின் வீட்டில் பாதுகாப்புப் பணியில் இருந்த பஞ்சாப் மாநில போலீஸார் நேற்று முன்தினம் விலக்கிக் கொள்ளப்பட்டனர். மாநில போலீஸாரின் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்ட மறுநாளே (நேற்று) மத்திய அரசின் சிஆர்பிஎப் படையினர் ஹர்பஜன் சிங் வீட்டில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாஜகவில் இணைந்ததைத் தொடர்ந்து ஹர்பஜன் சிங்குக்கு மத்திய அரசின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தினந்தோறும் அவரது வீட்டுக்கு 9 முதல் 10 சிஆர்பிஎப் வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். இதனிடையே, கட்சித்தாவிய எம்.பி.க்களை துரோகிகள் என பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் சிங் கடுமையாக விமர்சித்துள்ளார்.

# மனைவிக்கு கடன் விஜய் வேட்புமனுவை ஆய்வு செய்யக் கோரிய வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி



சென்னை: தனது வேட்புமனுவில் மனைவிக்கு ரூ.12 கோடியே 60 லட்சம் ரூபாய் கடன் கொடுத்ததாக தவெக தலைவர் விஜய் குறிப்பிட்டுள்ளது குறித்து ஆய்வு செய்யக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து, சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் போட்டியிட்ட தவெக தலைவர் விஜய் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் 100 கோடி ரூபாய் வித்தியாசம் உள்ளது குறித்து வருமான வரித்துறை விசாரிக்கக் கோரி பெரம்பூர் தொகுதி வாக்காளர் தாக்கல் செய்த வழக்கு, ஜூன் மாதத்துக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வேட்புமனுவில் பெருந்தொகையை மனைவி உள்ளிட்டோருக்கு கடனாக வழங்கியுள்ளதாக, விஜய் தனது வேட்புமனுவில் கூறியுள்ளது குறித்து ஆய்வு செய்யக் கோரி, மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெரம்பூர் தொகுதி வாக்காளர் வெங்கடேஷ் தாக்கல் செய்த மனுவில்,விவாகரத்துகோரிதவெகதலைவர் விஜய்யின் மனைவி சங்கீதா வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், வேசட்புமனுவில் அவருக்கு 12 கோடியே 60 லட்சம் ரூபாய் கடன் கொடுத்துள்ளதாக கூறியுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாககூறப்பட்டுள்ளது.

வேட்புமனுவில் சொத்து விவரங்களை தெரிவிப்பது வெறும் சடங்கு அல்ல. அதில் உண்மை விவரங்களை மறைப்பது தேர்தல் நடைமுறையை மோசடி செய்வதை போன்றது எனவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. தனியார் கல்வி அறக்கட்டளைக்கு 20 கோடி ரூபாய் பணம் வழங்கியுள்ளது குறித்து வேட்புமனுவில் முறையாக எந்த விளக்கமும் அளிக்கவில்லைஎனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு, ஏற்கனவேஇதேகோரிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால்,இந்தவழக்கை விசாரணைக்கு ஏற்க முடியாது எனக் கூறி, தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

# விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து: ரூ.20 லட்சம் இழப்பீடு கோரிய வழக்கு; ஐகோர்ட் கிளை ஒத்திவைப்பு



மதுரை: விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூ.20 லட்சத்திற்கும் குறையாமல் இழப்பீடு வழங்ககோரிய வழக்கை உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

விருதுநகரை சேர்ந்த விடியல் வீர பெருமாள் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: "சிவகாசியில் கடந்த 19-ம் தேதி நடைபெற்றதீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு 20 லட்ச ரூபாய்க்கு குறையாமல் இழப்பீடு வழங்கவேண்டும்.50சதவீதம்தீக்காயம் அடைந்தவர்களுக்கு 15 லட்சம் ரூபாயையும், 25-50 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 10 லட்சம் ரூபாயும், 5-25 சதவீதம் தீக்காயம் அடைந்தவர்களுக்கு 5 லட்சம் ரூபாயும்,இழப்பீடாக வழங்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு கல்வி உள்ளிட்ட மறுவாழ்வு வசதிகளை செய்துதரவும்,விருதுநகர் பட்டாசு ஆலை விபத்தை தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும், விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலைகளை குறிப்பிட்ட இடைவெளிகளில் முறையாக ஆய்வு செய்து விதிகள் மீறுபவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்." எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதி ராமன் அமர்வு, "ஒரே கோரிக்கைக்காக பல மனுக்கள் தாக்கல் செய்வது தேவையற்றது. இது சில நேரங்களில் சிலர் விளம்பரத்திற்காக பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பாகி விடுகிறது என அறிவுறுத்தி, பட்டாசு ஆலை விபத்து தொடர்பான வழக்கோடு இந்த வழக்கையும் சேர்த்து பட்டியலிட உத்தரவிட்டு வழக்கை ஜூன் 8ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# மும்பையில் காஸ் இணைப்பு துண்டிப்பதாக ரூ.2.7 கோடி ஏமாற்றிய கும்பல்




மும்பை: பழைய காஸ் பில்களை செலுத்தாவிட்டால் இரவுக்குள் காஸ் இணைப்பை துண்டிப்போம் என்று கூறி மும்பையில் பொதுமக்களிடம் ரூ.2.7 கோடியை ஏமாற்றிய மர்மகும்பலை போலீஸார் தேடி வருகின்றனர்.

மகாராஷ்டிர மாநிலம் ₹மும்பையில் திமஹாநகர் காஸ் லிமிடெட்'(எம்ஜிஎல்)என்ற காஸ் நிறுவன ஏஜென்சி உள்ளது. இந்நிலையில் அந்த காஸ் ஏஜென்சியின் வாடிக்கையாளர்களுக்கு ஒரு மர்ம கும்பல் எஸ்எம்எஸ்-களை அனுப்பியுள்ளது. அதாவது இன்று இரவுக்குள் பழைய காஸ் பில்களை செலுத்தாவிட்டால் காஸ் இணைப்பைத் துண்டித்து விடுவோம்என்று கூறி அதனுடன் ஒரு செல்போன் அப்ளிகேஷனையும் இணைத்துள்ளனர்.

அந்த அப்ளிகேஷனை டவுன்லோடு செய்து அதை நிரப்பு மாறும்அவர்கள் அந்த எஸ்எம்எஸ்-ஸில் தெரிவித்துள்ளனர். அந்த செல்போன் அப்ளிகேஷனை வாடிக்கையாளர்கள் டவுன்லோடு செய்தால், அந்த செல்போனில் உள்ள தகவல்களை அந்த சைபர் கிரைம் மர்ம கும்பல் திருடி வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை எடுத்துள்ளனர்.கடந்த 30 நாட்களில் இதுபோன்று ரூ.2.7 கோடியை அவர்கள் சுருட்டியுள்ளனர். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்த சைபர் கிரைம் போலீஸார் மர்ம கும்பலைத் தேடி வருகின்றனர்.

# மேற்கு வங்கத்தில் உருளைக்கிழங்கு விலை கிலோ ரூ.3 ஆக வீழ்ச்சி



சிங்கூர்: மேற்கு வங்கத்தில் அமோக விளைச்சலால் உருளைக்கிழங்கு விலை கிலோ ரூ.3 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது.

மேற்கு வங்கத்தின் சிங்கூர் பகுதியில் இந்த ஆண்டு உருளைக் கிழங்கு விளைச்சல் அமோகமாக உள்ளது. அதேநேரம்அதிகவரத்து காரணமாக அதன் ஒரு விலை ரூ.3 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது.போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் அவற்றைச் சாலைகளில் கொட்டி வருகின்றனர்.

இது குறித்து விவசாயி பிரதீப் தாஸ் கூறும்போது, " உருளைக் கிழங்கின் அதிகப்படியான உற்பத்தி வருவாயைக் குறைத்துவிட்டது. ஒரு பிகா நிலத்தில் உருளைக் கிழங்கு பயிரிட சுமார் ரூ.20,000 செலவாகிறது, ஆனால் எங்களுக்கு ரூ.16,000 முதல் ரூ.18,000 வரை மட்டுமே கிடைக்கிறது" என்றார்.

அவரது கூற்றுப்படி, கையிருப்பு மிக அதிகமாக இருப்பதால்,குளிர்பதனக் கிடங்குகளில் உள்ள உருளைக்கிழங்குகளைக் காலி செய்யவே ஒன்றரை ஆண்டுகள் ஆகலாம். எல்லைகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால், உருளைக் கிழங்குகள் வெளியே செல்ல முடியாமல் தேக்கமடைந்து விலை சரிந்துள்ளது.

இந்த ஆண்டு உருளைக்கிழங்கு உற்பத்தி சுமார் 1.4கோடி டன்னாக உயர்ந்துள்ளது. இந்த உபரி வரத்து சேமிப்பு நிலையங்களுக்கு பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. குளிர்பதனக் கிடங்குகள் அனைத்தும் முழுமையாக நிரம்பிவிட்டன என்றும், புதிய மூட்டைகளை வைக்க இடமில்லை என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

விவசாயி ஜோஹர் தத்தா கூறும்போது, "மற்ற மாநிலங்களிலும் உருளைக் கிழங்கு உற்பத்தி அதிகமாக இருப்பதால்,வங்காள உருளைக் கிழங்குக்கான தேவை குறைந்து விட்டது. கிடங்குகளில் இடமில்லாததால் வெளியில் வைக்கப்படும் உருளைக் கிழங்குகள் அழுகி வீணாகின்றன. இதனால் மாநிலம் முழுவதும் உள்ள விவசாயிகள் பெரும் நஷ்டத்தைச் சந்தித்து வருகின்றனர்" என்றார்.

# புதினுடனான சந்திப்பு போர் நிறுத்தம் பற்றி ஆலோசிக்க நல்ல வாய்ப்பு: ஈரான் தகவல்



" தெஹ்ரான்: அமெரிக்கா - ரஷ்யா இடையிலான பேச்சுவார்த்தை மற்றும் சமாதான முயற்சிகள் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி ரஷ்ய அதிபர் புதினை சந்திக்கவுள்ளார்.

பேச்சுவார்த்தை தொடர்பாக பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்குச் சென்று வந்த அப்பாஸ் அராக்சி ஓமானுக்கும் சென்றார். இந்தச் சூழலில், அவர் இன்று (ஏப்ரல் 27) ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக ஈரான் தூதர் தெரிவித்துள்ளார்.

"போர் நிலவரங்கள் குறித்து விவாதிக்க விளாடிமிர் புதினுடனான சந்திப்பு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்," என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறியதாக ஐஆர்என்ஏ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் மத்தியஸ்தர்கள் மூலமாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது மற்றும் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக ஒரு புதிய முன்மொழிவை ரஷ்யா அமெரிக்காவிடம் வழங்கியது. இதுகுறித்து அமெரிக்கா முடிவெடு க்காததால் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. ஈரானின் உயர்மட்ட தூதர் பாகிஸ்தானை விட்டு வெளியேறியதாலும், பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டாம் என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியதை அடுத்து அமெரிக்க தூதர்கள் வராததாலும், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வியடைந்தன. இது பற்றி பேசிய ட்ரம்ப்," வெறுமனே உட்கார்ந்து அர்த்தமற்ற விஷயங்களைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. ஆனாலும் போர் உடனடியாக மீண்டும் தொடங்காது" என்று குறிப்பிட்டார்.பாகிஸ்தான் பிரதமர்ஷெபாஸ்ஷெரீஃப், ஈரான் அதிபர் மசூத் பெஷெஷ்கியனுடன் தொலைபேசியில் பேசி, மாறிவரும் பிராந்திய சூழல் குறித்து விவாதித்தார். ஐம்பது நிமிடங்கள் நீடித்த அவர்களின் உரையாடலின் போது, தற்போதைய பிராந்திய நிலைமை மற்றும் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்து இரு தலைவர்களும் விரிவான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டனர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

# உணவு விநியோக ஊழியரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற தலைமைக் காவலர்: பீகாரி எனக் கூறி தாக்குதல்



புதுடெல்லி: உணவு விநியோகப் பணியாளரை 'பீகாரி' எனக்கூறி தலைமைக் காவலர் அவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம்' டெல்லியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பீகாரை சேர்ந்த பாண்டவ் குமாரும், அவரது நண்பர் கிருஷ்ணனும் டெல்லியில் உணவு விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்நிலையில், (ஏப்ரல் 26) அதிகாலை 2.30 மணியளவில் டெல்லியில் உள்ள ஜாஃபர்பூர் கலான் பகுதியில் சாலையில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த தலைமைக் காவலர் நீரஜ் பல்ஹாரா, அவர்களிடம் யார், என்ன என்ற விவரங்களை விசாரித்து ள்ளார். அப்போது இருவரையும் தலைமைக் காவலர் நீரஜ் பல்ஹாரா, சாதி ரீதியாக திட்டியதாக கூறப்படுகிறது. அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த காவலர் நீரஜ் பல்ஹாரா தான் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து பாண்டவ் குமாரை நோக்கி சுட்டுள்ளார். இதில், பாண்டவ் குமாரின் நெஞ்சு பகுதியில் பாய்ந்த குண்டு, பின்பக்கமாக வெளியேறி அங்கு அமர்ந்திருந்த கிருஷ்ணனின் வயிற்றுப் பகுதியில் பாய்ந்தது. இதனை பார்த்த காவலர் நீரஜ் பல்ஹாரா அங்கிருந்து தப்பியோடினார்.

இதையடுத்து, அங்கிருந்தவர்கள் இருவரையும் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். எனினும், பாண்டவ் குமாரை பரிசோதித்த மருத்துவர்கள், வரும் வழியிலேயே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். கிருஷ்ணன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து தகவலறிந்த ஜாஃபர்பூர் கலான் போலீசார், சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்குச் சென்று கிருஷ்ணனிடம் விசாரணை நடத்தினர். பின்னர் தப்பியோடிய காவலர் நீரஜ் பல்ஹாராவை போலீசார் கைது செய்தனர். முதற்கட்ட விசாரணையில், "பாண்டவ் குமார், கிருஷ்ணன் ஆகிய இருவரும் நண்பரின் குழந்தையின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்காக சென்றுள்ளனர். பின்னர் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு, வீட்டின் உரிமையாளருடன் சாலையில் நின்றுப் பேசிக் கொண்டிருந்துள்ளனர். சாலையின் எதிரே உள்ள இல்லத்தில் வசிக்கும் தலைமைக் காவலர் நீரஜ் பல்ஹாரா, அந்த இளைஞர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். வாக்குவாதம் அவர் தனது துப்பாக்கி யை எடுத்து பாண்டவ் குமாரை நோக்கிச் சுட்டுள்ளார்" என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாண்டவின் நண்பரும், நேரில் பார்த்தவருமான ரூபேஷ் குமார் கூறுகையில், "நீரஜ் பல்ஹாரா, பாண்டவ் குமாரை பார்த்து நீ ஒரு பீகாரி; இங்கிருந்து வெளியேறு என்று கூறியதாக தெரிவித்தார். தலைமைக் காவலரிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.


# எல்பிஜி டேங்கர் லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் தற்காலிக வாபஸ் என அறிவிப்பு



சென்னை: எல்பிஜி டேங்கர் லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் தற்காலிகவாபஸ் பெறப்பட்டுள்ளதாக தென்மண்டல டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க தலைவர் சுந்தர்ராஜன் அறிவித்துள்ளார். எல்.பி.ஜி கேஸ் டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு ஐ.ஓ.சி. ரூ.50 கோடி வாடகை பாக்கி வைத்துள்ளது. வாடகைபாக்கியை விடுவிக்கக் கோரி எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளர்கள் வேலைநிறுத்தம் அறிவித்தனர்.

வாடகை பாக்கியை 2 நாட்களில் தருவதாக ஐ.ஓ.சி. நிறுவன அதிகாரிகள் இ மெயில் மூலம் உத்தரவாதம் அளித்தார். ஐ.ஓ.சி. நிர்வாக இயக்குநர் உத்தரவாதம் அளித்ததை அடுத்து எல்.பி.ஜி. டேங்கர் லாரிகள் ஸ்டிரைக் வாபஸ் பெறப்பட்டது.

# நீலகிரி மாவட்டம் நீர்மின் நிலையம் அருகே காட்டுத்தீ



நீலகிரி: நீலகிரி மாவட்டம் மசினகுடி அருகே மரவகண்டி அணையை ஒட்டி உள்ள நீர்மின் நிலையம் அருகே வனப்பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. கடந்த 2 மாதங்களாக மாலை நேரத்தில் வரக்கூடிய பனிப்பொழிவு மற்றும் பகல் நேரத்தில் வெயிலின் காரணத்தினாலும் வனப்பகுதியில் உள்ள செடி, கொடிகள் அனைத்தும் வறட்சி காரணமாக கருகிய நிலையில் உள்ளது.

குறிப்பாக தமிழ்நாட்டில் நிலவி வரக்கூடிய கடும் வெயில் மற்றும் காற்றின் காரணமாக கூடலூர், மசினகுடி மற்றும் குன்னூர் அதன் சுற்று வட்டார பகுதிகளில் வனப்பகுதிகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. சுமார் 100 ஏக்கருக்கும் அதிகமான வனப்பரப்பு சேதமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கோடை வறட்சியின் காரணமாக காய்ந்த மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்ந்ததால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மசினகுடி - சிங்காரா இடையிலான வாகன சவாரிக்கு 2 நாட்கள் தடை விதிக்கப்ப ட்டுள்ளது. மேலும், காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் பணியில் வனத்துறையினர் மற்றும் தீயணைப்பு துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். காட்டு மரங்கள் மற்றும் மூலிகை தாவரங்கள் என முற்றிலுமாக தீ பரவியுள்ளது. தற்போது முதுமலை புலிகள் காப்பகம் வெளிமண்டல வனப்பகுதியில் விலங்குகளை இடம் விட்டு மாற்றியுள்ளனர்.

# இந்தியா நியூஸிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்து



புது டெல்லி: இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில், இந்தியாவும் நியூஸிலாந்தும் இன்று தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்தியா - நியூஸிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் நியூஸிலாந்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு அமைச்சர் டாட் மெக்ளே ஆகியோர் இன்று கையெழுத்திட்டனர்.

இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், அனைத்து வரி விதிப்பு முறைகள் மற்றும் உற்பத்திப் பிரிவுகளையும் உள்ளடக்கி, நியூஸிலாந்துக்கான இந்தியாவின் 100 சதவீத ஏற்றுமதிக்கு வரிவிலக்கு அளிக்கிறது.

மேலும், இந்த ஒப்பந்தம் மூலம் ஜவுளி, தோல், காலணிகள், ரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள், பொறியியல் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் போன்ற அதிக தொழிலாளர் தேவைப்படும் துறைகளில் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களையும் வேலைவாய்ப்பையும் கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, நியூஸிலாந்து பீங்கான் பொருட்கள், தரைவிரிப்புகள், வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் உள்ளிட்ட முக்கிய இந்திய ஏற்றுமதிகள் மீது 10 சதவீதம் வரையிலான உச்சபட்ச வரியைத் தொடர்ந்து விதித்திருந்தது. இனி நியூஸிலாந்திற்கான ஏற்றுமதிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படுவதால், இந்தியப் பொருட்கள் அந்நாட்டில் அதிகளவில் வர்த்தகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நியூஸிலாந்தின் 30 சதவீத வரிப் பிரிவுகளின் கீழ் வரும் மரம், கம்பளி, ஆட்டு இறைச்சி மற்றும் பதப்படுத்தப்படாத தோல் போன்ற பொருட்களுக்கு இந்தியா வரி விலக்கு அளிக்கும்.

இதேபோல், பெட்ரோலிய எண்ணெய், மால்ட் சாறு, தாவர எண்ணெய்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மின் மற்றும் இயந்திர சாதனங்கள், மற்றும் பெப்டோன்கள் உள்ளிட்ட 35.60 சதவீத வரிப் பிரிவுகளுக்கு, 3, 5, 7 மற்றும் 10 ஆண்டுகள் எனப் படிப்படியாக வரிவிலக்கு அளிக்கப்படும்.

வரிச் சலுகைகளைப் பெறும் நியூஸிலாந்து தயாரிப்புகளில் ஒயின், மருந்துப் பொருட்கள், பாலிமர்கள், அலுமினியம், இரும்பு மற்றும் எஃகு பொருட்கள் ஆகியவை அடங்கும்.

இந்தத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம், இந்தியாவுக்குள் 20 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான முதலீட்டை ஈர்ப்பதற்கான ஒரு உறுதிமொழியும் இடம்பெற்றுள்ளது.

2024-ஆம் ஆண்டில், பொருட்கள் மற்றும் சேவைகள் சார்ந்த இருதரப்பு வர்த்தகத்தின் மொத்த மதிப்பு 2.4 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியது குறிப்பிடத்தக்கது.

# "ஆம் ஆத்மியில் டாக்ஸிக் சூழல்..." பாஜகவில் இணைந்த ராகவ் சத்தா வீடியோவில் விவரிப்பு




புதுடெல்லி: ஆம் ஆத்மி கட்சியில் நச்சுத்தன்மை வாய்ந்த சூழல் நிலவுவதாகவும், சமீப ஆண்டுகளில் அக்கட்சியின் செயல்பாடுகள் பெரிய அளவில் சீர்குலைந்து விட்டதாகவும் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்துள்ள மாநிலங்களவை உறுப்பினரான ராகவ் சத்தா குற்றம் சாட்டினார்.

ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த பின்னர் ராகவ் சத்தா வெளியிட்ட முதல் காணொலியில், "ஒரு பட்டயக் கணக்காளராக எனக்குக் காத்திருந்த நம்பிக்கைக்குரிய பணிவாய்ப்பைத் துறந்து அரசியலுக்கு வந்தேன். நான் ஒரு தொழில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக அரசியலுக்கு வரவில்லை. நான் ஒரு அரசியல் கட்சி நிறுவப்படும்போதே அதன் உறுப்பினராக இணைந்தேன். எனது இளமைக் காலத்தின் பொன்னான பதினைந்து ஆண்டுகளை இந்தக் கட்சிக்காகவே அர்ப்பணித்தேன்.

ஆனால் இன்று, இந்தக் கட்சி முன்பு இருந்த அதே கட்சியாக இல்லை. இன்று, இந்தக் கட்சியில் ஒரு நச்சுத்தன்மை வாய்ந்த சூழல் நிலவுகிறது. நாடாளுமன்றத்தில் நாங்கள் பேசுவதும் தடுக்கப்பட்டது. எங்களைச் செயல்படவே விடவில்லை. மேலும், பொதுமக்களுக்கு சேவையாற்றுவதை விடத் தங்கள் தனிப்பட்ட நலன்களுக்காகவே செயல்படும் சில ஊழல்வாதிகள், சமரசவாதிகளின் கட்டுப்பாட்டிற்குள் அக்கட்சி சென்றுவிட்டது. ஆண்டுகளாக, "நான் சரியான மனிதனாக இருந்தாலும், ஒரு தவறான கட்சியில் இருக்கிறேனோ" என்று எனக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது.

கட்சியை விட்டு விலகுவது என முடிவெடுப்பதற்கு முன், அரசியலை விட்டு விலகுவது, கட்சிக்குள் இருந்து சீர்திருத்தங்களை மேற்கொள்ள முயற்சிப்பது அல்லது வேறொரு அரசியல் கட்சியில் இணைவது என மூன்று மாற்று வழிகளைப் பற்றி நான் தீவிரமாகச் சிந்தித்தேன்.

மொத்தம் 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் கட்சியை விட்டு விலக முடிவெடுத்துள்ளனர். இது அக்கட்சிக்குள் பரவலான அதிருப்தி நிலவுவதையே உணர்த்துகிறது. ஒருவர் தவறு செய்யலாம், இருவர் தவறு செய்யலாம்; ஆனால் 7 பேர் ஒரே நேரத்தில் தவறு செய்ய முடியாது. பொதுமக்களின் பிரச்சினைகளை இன்னும் அதிக ஆற்றலுடனும் அர்ப்பணிப்புடனும் தொடர்ந்து முன்னெடுத்துப் பேசுவேன்" என்று அவர் தெரிவித்தார்.

முன்னதாக, ஏழு ஆம் ஆத்மி கட்சி மாநிலங்களவை உறுப்பினர்கள் பாரதிய ஜனதா கட்சியில் இணைவதற்கு, மாநிலங்களவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ஒப்புதல் அளித்தார். இதனால் மாநிலங்களவையில் பாஜகவின் பலம் 113 ஆக உயர்ந்துள்ளது. மேலும், தற்போது மாநிலங்களவையில் ஆம் ஆத்மி கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 3ஆக குறைந்துள்ளது.

# ஸ்டார்ட் அப் நிறுவனம் மூலம் 4 மாதத்தில் ரூ.1 கோடி ஈட்டிய இளைஞர்



உ.பி.மாநிலம் நொய்டாவைச் சேர்ந்த உஜ்வல் நர் கோட்ரா என்ற 24 வயது இளைஞர், கடந்த சில மாதங்களுக்கு முன்பு லி ங்க் பிளீஸ் என்ற ஸ்டார்ட் -அப் நிறுவனத்தைத் தொடங் கியுள்ளார். இதைத் தொடங் கிய 4 மாத ங் க ளி லே யே ரூ.1 கோடி யை அவ ர் ஈட்டியுள்ளார். இது தொடர்பாக சமூக வலைதளங்களில் அவர் ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளார்.

இதற்கு முன்பு ஐடி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். பின்னர் அதை விட்டுவிட்டு இந்த ஸ்டார்ட் அப் நிறு வனத்தைத் தொட ங்கினேன். என்னுடைய வ ளர்ச்சிக்குப் பின்னால் 3 கட்ட செயல் திட்டம் உ ள்ளது. படைப்பாளிகள் (க ன்டென்ட் கிரி யேட்டர்ஸ்) உயர் தர மா ன உள்ளடக் கத்தை உருவாக்கி னாலும், அதிக அளவிலான நேரடிச் செய் திகளை (டி.எம்) நிர்வகிப்ப தி ல் சிரமப்படுகி ன்றனர். அவர் களுக்குத் தேவை யான சேவைகளை வழங் குவதுதான் எங்களது நிறு வ ன த்தி ன் பணியாகும். படை ப்பாளி கள் சிறந்த உள் ள டக் கத்தை வெளி யி ட் டாலும், அதைத் தொ டர்ந்து வரும் நேரடிச் செய் திகள் மற்றும் அதிக அளவிலான கருத்துகளை கட் டுப்ப டுத்த முடியாமல் சிரமப்படுகின்றனர். அந்த இ டை வெளி தான் அவர் களின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. அதைத் தீர்க்க வே இந்த ஸ்டார்ட் அப் நிறுவனத்தைத் தொடங்கினோ ம். தொ டக்கத்தில் எங்களது தளத்தின் பயன்பாட்டை கட்டணமின்றி படை ப்பாளிகளுக்கு வழ ங்கினோம். எங்களது நோக்கம் அதுவாகவே இருந்தது. அது எங்களை மிக எளிதாக எல்லோரையும் அணுக உதவியது. குறைவான செலவில் ஆற்றல்மிக்க ஆட்டோமேஷன் இன்ஜினை வடிவமைத்தோம். அந்த முதல் பதிப்பை வி1 அறிமுகம் செய்தோம்.

அதன் மூலம் படைப்பாளிகளிடம் இருந்து எங்கள் தளத்தின் பயன்பாடு சார்ந்து பல்வேறு பின்னூட்டங்களை பெற்றோம். இதில் வேடிக்கை என்னவென்றால் எங்களது தளத்தின் சேவையை ஆரம்ப நிலையிலேயே படைப்பாளிகள் பலர் ஏற்றுக் கொண்டனர். அவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் மாற்றங்கள் மேற்கொண்டோம். ரூ.1 கோடியை 4 மாதங்களில் ஈட்டியுள்ளேன். எனது அடுத்த இலக்கு ரூ.10 கோ டியாகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.